உடனடியாக பேச்சுவார்த்தை நடத்தி இப்போதைக்கு உயர்நீதிமன்றத்தின் கிளையை அங்கே இருக்கக்கூடிய செஷன்ஸ் நீதிமன்றத்திலேயே அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கின்ற செஷன்ஸ் நீதிமன்றத்திலே போதிய இடம் இல்லை. உயர் நீதிமன்ற கிளையை உருவாக்குகின்றபோது அதனுடைய தேவைகள், வசதிகள் எல்லாமே மிக அதிகமாக உள்ள காரணத்தால் இதுகுறித்து 10, 15 ஆண்டுகளுக்கு முன்னரே பரிசீலிக்கப்பட்டு உயர் நீதிமன்றம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த அடிப்படையில்தான் ரூ56 கோடியே 45 இலட்சத்தில் ஒரு திட்ட மதிப்பீடு 2000 ஆண்டிலே தீர்மானிக்கப்பட்டு, அதற்கான அறிவிப்பு மேற்கொள்ளப்பட்டு, திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் நிதி ஒதுக்குவதில் தாமதம் ஏற்பட்டது. தற்போது மீண்டும் அதை நாங்கள் ஆய்வு செய்தோம். ஆய்ந்த அடிப்படையில் 56 கோடியே, 45 இலட்சம் ரூபாய் தேவையில்லை. 36 கோடியே, 86 இலட்சம் ரூபாய் மட்டுமே போதும் என்று ஒரு கருத்துருவை தற்போது சம்பந்தப்பட்ட பொறியாளர்கள் தந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் 12 கோடியே, 75 இலட்சம் ரூபாய் தற்போது ஒதுக்கப்பட்டிருக்கிறது. முதல் கட்டப் பணிகள் முடிவுற்றவுடனேயே உயர் நீதிமன்றக் கிளை அங்கு தொடங்கப்படலாம் என்ற ஒரு முடிவு உயர் நீதிமன்றத்தோடு கலந்து எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, இதுகுறித்து பெரும் பிரச்சினை எதுவும் எழாது என்று நான் நம்புகிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், அமைச்சரிடம் பிறகு கேட்டுக்கொள்ளலாம். உட்காருங்கள்.

4. அறிக்கைகள் அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2001-2002 ஆம் ஆண்டுக்கான

2001 செப்டம்பர் 13] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

பொதுக் கணக்குக் குழுவின் நான்கு முதல் எட்டு வரையிலான, ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்ட முன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS